★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 2உ சனி (14—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 3உ ஞாயிறு (15—4—56) [இதழ் 259

தண்டனைக் குறைப்பு!

புதுடில்லி, ஏப். 13—

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களிடமிருந்து இரக்கம் காட்டுமாறு கோரி கடந்த நான்கு மாதங்களில் 45 கருணை மனுக்கள் வந்தன. எவரும் மன்னித்து விடுதலை செய்யப்படாவிடினும் 13-பேர்களின் தூக்குத் தண்டனை, ஆயுட்காலச் சிறைத் தண்டனையாகக் குறைக்கப்பட்டது என்று மக்கள் சபையில், பண்டித பந்த் தெரிவித்திருக்கிருர்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னல் ஒப்பப்பட்ட தன்றே வாக்கெடுப்பு?

பழைய விஷயங்களைத் தொடர்ந்து போவது அறிவுடைமையாகுமா?

புதிய முயற்சியால் காஷ்மீர் பெற்ற அபிவிருத்திகள் நிலைகுலைந்துவிடும்!

அமெரிக்க இராணுவ உதவியும், பாகிஸ்தான் இணைந்துள்ள இராணுவ உடன்படிக்கைகளும் காஷ்மீர் வாக்கெடுப்பைத் தகர்த்துவிட்டன!

தன்னிடம் உள்ள காஷ்மீர் பகுதியுடன் பாகிஸ்தான் திருப்தி அடையவேண்டியதே!

காஷ்மீர் வாக்கெடுப்பு குறித்து இந்தியப் பிரதமர்

புதுடில்லி, ஏப். 13—

"அளவுகடந்த செயல்களையும், ஆர்ப்பாட்டங்களையும் காஷ்மீரில் நீங்கள் செய்துவிட்டீர்கள். உங்களிடம் சிக்கியுள்ள காஷ்மீர் பகுதியை வைத்திருக்க உங்களுக்கு உரிமை கிடையாது. சச்சரவும் சீரழிவும் இருக்கக்கூடாது என்பதுதான் என் விருப்பமாகும்.

"உங்களிடம் இருக்கும் காஷ்மீர் பகுதி பற்றிய பிரச்சினையில், தற்போதைய போர் நிறுத்த எல்லையை அடிப்படையாகக்கொண்டு, எல்லை நிர்ணயிப்புக்கு நான் உட்படுகிறேன்; போரிட்டு அப்(பாகிஸ்தான்)பகுதியை அணைத்துக்கொள்ளும் விருப்பம் எங்களுக்கு இல்லை.

"இதை நான் பாகிஸ்தான் தலைவர்களிடம் தெளிவாகத் தெரியப்படுத்திவிட்டேன்.

"பாகிஸ்தான் பெறும் அமெரிக்க இராணுவ உதவி, காஷ்மீர் வாக்கெடுப்பின் கடைக்காலையும், வேர்க்காலையும் அழித்துவிட்டது.

"தற்போதைய போர் நிறுத்த எல்லையை மையமாகக் கொண்டு, இராஜ்ய எல்லைகளை வகுத்துக்கொள்ளப் பேச்சுவார்த்தை நடத்தும்படி, பாகிஸ்தான் தலைவர்களை அறிவுறுத்தும் தொலைவுக்கு இந்தியா சென்றுவிட்டது."

இவ்வாறு, இந்தியப் பிரதமர் நேரு, புதுடில்லியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அறிவித்துள்ளார்.

அவர் தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் பாகிஸ்தானின் அரசாங்கம் பலமுறை மாறி இருக்கிறது.

"குறிப்பிட்ட ஒரு அரசாங்கம் பாகிஸ்தானில் எவ்வளவு காலத்திற்கு நிலைத்து இருக்கும் என்பதில் உறுதியான கருத்தறிவிக்க ஒருவராலும் இயலாது. எந்தவிதப் போரிலும் தான் சிக்கிவிடாமல் பார்த்துக்கொள்ள, மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டியது இந்தியாவிற்கு அவசியமாகிறது. பாகிஸ்தான் வேண்டுமென்றே தொடுத்ததாக அப்போர் இருக்காது; அது தற்செயலாக ஏற்படுவதாகத்தான் இருக்கக்கூடும்.

"கடந்த ஒன்பது ஆண்டுகளுக்குமுன் ஒப்புக்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பு பற்றிய பழைய விஷயங்களை, அக்காலங்களில் பாகிஸ்தானில் நடைபெற்றிருக்கும் பெரும் விளைவுகள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்காது, நான் இப்பொழுதும் பற்றித் தொடரவேண்டும் என எதிர்பார்ப்பது அறிவுடைமைக்கு அறிகுறியாகாது.

"பாகிஸ்தானில் பல புதிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவை அனைத்திலும் சிறப்பு வாய்ந்தது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்கும் இராணுவ உதவியேயாகும். அதனால், பிரச்சினையின் முழு உருவமே மாறிவிட்டிருக்கிறது. தான் தரும் இராணுவ உதவியை இந்தியாவிற்கு எதிராகப் பயன்படுத்த வேண்டுமென்பது அமெரிக்காவின் கருத்தல்ல என்பதை நான் ஒப்புகிறேன். ஆனால், இந்தியாவைத் தாக்க பாகிஸ்தானும்

(4-ம் பக்கம் பார்க்க)

2,000 பம்பாய் கடற்படை தளத் தொழிலாளர்

மூன்றுமணி நேர அடையாள வேலை நிறுத்தம்

பம்பாய், ஏப். 13—

தங்கள் கோரிக்கைகளை ஏற்க மறுத்ததற்காகப் பம்பாய் இந்திய கடற்படைத் தளத்தில் வேலை செய்யும், சுமார் 2,000 'சிவிலியன்' ஊழியர்கள், மூன்று மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தனர் என்று தெரிய வருகிறது

தங்கள் வேலை நிலைகளை திருத்தி அமைப்பதற்கு, தொழிலாளர்கள்—நிர்வாகிகளிடையே பேச்சுவார்த்தை நடைபெறச் செய்வதற்கான ஏற்பாடு செய்யுமாறு தொழிலாளர்கள் கோருகின்றனர்.

தங்கள் கோரிக்கைகளை சர்க்கார் ஈடேற்றவில்லையானல் வரும் 17-ந் தேதி முதல் காலவரையறையின்றி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்திருப்பதாகத் தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அசாம் மாநில வரவு — செலவுக் கணக்குகளில் ஒழுங்கீனம்!

அசாம் மாநில சர்க்காரின் வரவு - செலவுக் கணக்குகளில் சுமார் 16,960 ஆட்சேபக் குறிப்புகள் இன்னும் பதிலிறுக்கப் படாமலிருப்பதாக 1955-ம் ஆண்டிற்கான தணிக்கைக் குழு அறிக்கை கூறுகிறது.

இந்த ஆட்சேபத்திற்கு இலக்காகியுள்ள தொகையின் மதிப்பீடு ரூ. 7,09,05,979 ஆகும்.

இந்த ஆட்சேபங்களுக்குப் பதிலளித்து, அவற்றைச் சரி செய்வதில் தாமதம் ஏற்படுவதற்குப் போதுமான காரண விளக்கம் தரப்படவில்லை என்றும் தணிக்கைக் குழு அறிக்கை கூறுகிறது.

பல ஆட்சேபங்கள், 1944-45ம் ஆண்டுக் கணக்குகளைப் பொறுத்தவையாம்.

தணிக்கைக் குழுவின் அறிக்கை மாநில சட்டசபையின் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இராமாயணத்தை நுணுகி ஆராயக்கூடாதாம்!

புதிது புதிதாக புனைந்துரைத்தலே தேவையாம்!

ஆபாசம் அரங்கேறி விடுமே என்ற அச்சம் போலும்!

முன்னாள் நீதிபதி வி. பாஷ்யம் அய்யங்காரின் விளக்கம்

கோவை, ஏப். 12—

ஆராய்ச்சி, மனித வளர்ச்சியின் கருவூலம். ஆராய்ச்சியின் விளைவு, அறிவுப் பெருக்கம்—விஞ்ஞானம்.

ஆராய்ச்சியின் உருபயனாய், அணுவின் ஆற்றல் அம்பலமாயிற்று. ஆராய்ச்சிக்கு வரம்பு கட்டப்பட்டிருந்தால், மனித குலம் கூனிக் குறுகிக் குட்டிச்சுவராய்ப் போயிருக்கும்.

எனவே, ஆராய்ச்சி, மனித வளர்ச்சிக்கு வித்தாக இருப்பதால், அதை அறிஞர் பேணிக்காப்பதில், இன்னுயிர் ஈந்தேனும் வளர்த்து வருவதில், ஈடுபட்டுவந்தனர்—வருகின்றனர். அதனாலேயே, எந்தப் பொருளையும், எக்கலையையும் நுணுகி ஆராய்ந்து உண்மை காண்பதில், அதன் விளைவாக உருவாகும் தெளிவை அறிந்து மகிழ்வதில், அறிஞர் பெருமக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

இதற்கு மாறாக, 'இராமாயணத்தை நுணுகி ஆராய்ந்து அறியும் முயற்சியில் ஈடுபடாதீர்—அது வேண்டவே வேண்டாம்' என, அய்யங்கார் ஒருவர் அலறித் துடிக்கக் கிளம்பி இருக்கிறார்!

ஏன் அவருக்கு, ஆராய்ச்சி எட்டியாக—வேம்பாக இருக்கிறது?

'இராம காதை'யில் மலிந்துள்ள பொய்மையும், ஆபாசங்களும் அம்பலமாகிவிடும்—உண்மை தெரிந்த மக்கள் இராமனை உதறித் தள்ளிவிடுவர் என அஞ்சுகிறார் போலும், அந்த அய்யங்கார்!

அவர், வெறும் அய்யங்கார் அல்லவே! ஆங்கில சட்டம் கற்றவர்! சட்ட நுணுக்கம் தெரிந்தவர்! சென்னை உயர் நீதி மன்றத்தில் முன்னொருநாள் நீதிபதியாக இருந்து நீதி வழங்கியவர்!

அந்த வி. பாஷ்யம் அய்யங்கார் அவர்கள்தான் கூறுகிறார்—

(4-ம் பக்கம் பார்க்க)

40 பவுண்டு உணவு உட்கொள்ள

100 டாலர் பந்தயம்

100 டாலர்—சுமார் 470 ரூபாய்—சாதாரணமாகக் கிடைத்துவிடக் கூடியதா என்ன?

'40 பவுண்டு உணவு உட்கொண்டால், 100 டாலர் தருகிறேன்' என்று பந்தயம் கட்டினாராம் ஒருவர். பந்தயத்தை ஏற்றுக்கொண்டு, ஐந்து மணி நேரம் சிரமப்பட்டு, 40 பவுண்டு எடையுள்ள உணவுப் பண்டங்களை உட்கொண்டாராம், அந்த இளைஞர்!

ஆனால், பந்தயத் தொகையை மருத்துவ மனையிலிருந்துதான் அவரால் பெற முடிந்ததாம்!

இந்தச் சம்பவம், அமெரிக்காவில் உள்ள ரியொடிஜெனீரோ நகரில் நடைபெற்றதாம்.

சென்னை மின்சார வெட்டு சித்தூர் மக்களைப் பாதிக்காது!

எரி மின்சார உற்பத்தி மூலம் குறைப்பு ஈடு செய்யப்படுகிறது

ஆந்திர அரசாங்கத்தின் அறிவுடை முன்னேற்பாடு

கர்னூல், ஏப். 13—

சென்னை மாகாணத்தில் நீர் மின்சார உற்பத்தி, மக்களின் குறைந்தபட்சத் தேவையையும் நிரப்புவதாக இல்லை. மின்சாரத்தில் பற்றுக்குறை இருப்பதுடன் ஒவ்வொரு ஆண்டும், நீர்த் தேக்கத்தில் ஏற்படும் நீர்க் குறைவின் காரணமாக மின்சார உற்பத்தியின் கால அளவிலும் வரையறை ஏற்படுத்த வேண்டியதாகிறது. அதன் பலனாக மின்சாரத்தையே நம்பி இயங்கிவரும் ஆலைகளிலும் தொழில் நிறுவனங்களிலும், பணிபுரிவது மட்டுப்படுகிறது. அந்த அளவிற்கு உற்பத்திக் குறைவிற்கும் அதன் விளைவாகக் கிளம்பும்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 14—4—'56 சனி

கேடு தரும் பாகுபாடுகள்

'சாதிப் பாகுபாடுகள்தான் நமது முன்னேற்றத்தின் முதல் எதிரி' என்று, இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதம மந்திரி நேரு, தனக்கு மக்களைச் சந்திக்கிற வாய்ப்புக் கிடைக்கிற நேரத்தில் எல்லாம், குரலில் கண்டிப்பை வரவழைத்துக் கொண்டு பேசத் தவறுவதில்லை.

'இந்தியாவின் ஒற்றுமை,' 'பாரத மாதா ஒருவளே நமக்கு அன்னை' என்பன போன்ற ஏகாதிபத்திய 'உபதேச'ங்களோடு சேர்த்துத்தான், இந்தச் சாதிப் பாகுபாடுகள் ஒழிய வேண்டும் என்ற நல்லுரையையும் அவர் வழங்கிவருகிருர்.

இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பதாக மொழிவழி மாநிலக் கோரிக்கை இவர் கண்களுக்குப் படுகிறது. 'கன்னட மாதா வாழ்க என்று ஏன் கூவுகிறீர்கள்; பாரத மாதா மட்டும் வாழ்க என்ருல் போதாதா?' என்று கேட்கிருர்.

இந்தியாவில் வாழும் அத்தனை மக்களும், தங்களை இந்தியர்கள் என்று கூறிக்கொள்வதோடு நின்றுவிட வேண்டும் என்று, என்றுமே பலிதமாக முடியாத ஒரு கனவின் 'இன்ப நிலை'யை அவர் சொல்லிக் காட்டுகிருர் — 'பாரத மாதா என்ற அன்னை மட்டும் போதுமானது' என்பதன் மூலம்!

'பாரத மாதா' மட்டுமே இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் அனைவரின் ஒரு அன்னையாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு மொழி, இன, நாகரிகப் பாகுபாடுகள் குறுக்கே நிற்பதாக உணருகிற அவர், எவ்விதக் கேடுமே புரியாத— மாருக, நல்வாழ்விற்கு அடிகோலுகிற மொழி, இன, பண்பாட்டு பாகுபாடுகளை, மிகக் கீழ்த்தரமான சாதிப்பாகுபாடுகளுடன் சேர்த்துக் கூறுவதின் மூலம், மக்கள், அவற்றையும் வெறுத்து ஒதுக்கிவிட வேண்டும் என்று அவர் எண்ணுகிருர். பரிதாபத்திற்குரிய தோல்வியை அணைத்துக்கொள்ளப்போகும் முயற்சியில் அந்தப் பெரிய மனிதர் தெரிந்தே ஈடுபட்டிருப்பது, விந்தையானதுதான்.

சாதிப் பாகுபாடுகள், மிகக் கீழ்த்தரமான பிற்போக்குவாதிகளின் சுயநல ஏற்பாடு என்பதைப் பாராளும் பண்டிதர் அறியாதவர் அல்ல.

இந்த ஏற்பாடு நிலை நிற்பதில் தான் தங்களது சொகுசான வாழ்வின் அடிப்படை தொக்கி நிற்கிறது என்பதால், இந்த ஏற்பாட்டை தகர்க்க எவரும் முன்வரக் கூடாதபடி, மக்களது அறிவையும் பறிமுதல் செய்து, அவர்களை அறியாமையில் தள்ளி வைத்திருக்கின்றனர். இதுவும் பண்டிதர் உணர்ந்திருக்கும் ஒன்றுதான். மனிதாபிமானமற்ற, காட்டுமிராண்டித்தனமான, கடைந்தெடுத்த சுயநல ஏற்பாடான இந்த சாதிப் பாகுபாடுகள், மனிதத்தின் ... சமூக மான தோழமையோடு கூடிய வளர்ச்சிக்கும், வாழ்விற்கும் எத்தனை பெருங் கேடுகளை விளைவிக்கக் கூடியன என்பதும் நல்லோர் உணர்ந்துள்ள ஒன்றுதான்.

இந்தத் தீய ஏற்பாட்டினை, களங்கமற்ற, பிறருக்குக் கேடு ஏதும் விளைவிக்காத மொழி, இன, கலாச்சாரப் பாகுபாடுகளோடு ஒப்பவைத்துப் பேசுவது, நாகரீகமானதல்ல!

சாதி மதப் பாகுபாடுகளை ஒழிக்க வேண்டுமென்பதில், பண்டித நேருவிற்கு உள்ள ஆர்வத்தைவிட நமக்கு நிச்சயம் அதிகமான ஆர்வம் உண்டு என்பதை நாட்டவர் அறிவர். கேடுகள் பல விளைவிக்கும் சாதிப்பாகுபாடுகளை விளக்க முற்படும் நேரு, என்றுமே சுலபத்தில் அழித்துவிட முடியாத, மாருக, நாளுக்கு நாள் வளர்ச்சியும் செம்மையும் பெறக்கூடிய தேவையான— தீங்கு பயக்காத மொழி, இன, கலாச்சாரப் பாகுபாடுகளையும் அவர் இணைத்துப் பேசுவது அவரது வஞ்சக நெஞ்சத்தையும், அங்கே குடிபுகுந்துள்ள ஏகாதிபத்திய நோக்கத்தையும் தெளிவாகப் பிறர் உணர்ந்து கொள்ளவே உதவுவனவாக உள்ளன.

சாதிப்பாகுபாடுகளுக்கு எதிராக சங்கநாதம் எழுப்பும இவரைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் கட்சியில் தலைவிரித்தாடும் சாதி வெறி, இவருக்குத் தெரியாமற் போனது ஏன் என்று, மதவெறித் தலைவர் ஒருவர் எழுப்பியுள்ள கேள்வியில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. 'இந்தியாவில் உள்ள வேறெந்த இயக்கத்தையும்விட காங்கிரஸ் கட்சியில் தான் சாதிவெறி அதிகமாக இருக்கிறது', என்று அவர் கூறியது முற்றிலும் தவருனதல்ல!

சாதிகள் ஒழிய வேண்டும் என்று உரத்த குரலில் பேசும் அவர், சாதிப் பாகுபாடுகள் ஒழிய, அந்தப் பாகுபாடுகளைத் தாங்கி நிற்கும் சமூக அமைப்பின் அடிப்படையில் மகத்தான மாற்றம் ஏற்பட்டாலன்றி, வழி ஏற்படாது என்பதை உணர வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்த விரும்புகிருேம்.

தாமதமாக வந்த அமைச்சர்

கெடிகாரத்தின்மீது பழி போடுகிருர்!

உத்தர பிரதேச மந்திரி ஒருவர், தான் கேள்வி நேரத்தின்போது சபைக்குத் தாமதமாக வந்ததற்குத் தமது கெடிகாரத்தைச் சாக்காகக் கூறினர்.

கேள்விக்குரிய பதில்களை சபைக்கு அனுப்பிவிட்டு, சுகாதார திட்ட இலாகா மந்திரி சபைக்கு வரவில்லை. மூன்று நிமிடங்கள் தாமதமாக வந்தார். உடனே சபைத் தலைவர், இதற்கு விளக்கம் கேட்டார். மந்திரி, சபையில் உள்ள கடிகாரத்திற்கும், தனது கைக்கடிகாரத்திற்கும் மூன்று நிமிடங்கள் வித்தியாசமிருப்பதாயும், அதற்காக வருந்துவதாயும் தெரிவித்திருக்கிருர்.

பாகிஸ்தானிலிருந்து ஓடிவருவோர்க்கு வாழ்வுதர நாள் ஒன்றுக்கு ரூ. 1 லட்சம்

டெல்லி சர்க்காரின் தாராளம்

இந்த ஆண்டில் மட்டும் 91 கோடி ரூபாய் செலவிடப்படுமாம்

பாகிஸ்தானிலிருந்து அகதிகள் என்ற பெயரில் இந்தியாவிற்கு ஓடி வருகிறவர்களுக்கு நிவாரணம் தரவும், மறுவாழ்வு தரவுமாக இந்த ஆண்டு துவக்கம் முதல் டெல்லி சர்க்கார், நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டு வருகிருர்களாம்.

1956-57-ம் ஆண்டில், இந்த அகதிகளுக்குச் செலவிட, வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 91 கோடி. இதில் ரூ. 34 கோடி, கிழக்கு—மேற்கு பாகிஸ்தானிலிருந்து ஓடி வருபவர்களுக்கு நிரந்தர வாழ்வளிப்பதற்கான திட்டங்களுக்காகச் செலவிடப்படும்.

எஞ்சியுள்ள ரூ. 57 கோடி, அகதிகள், பாகிஸ்தானில் விட்டு வந்ததாகக்கூறும் அசையாப் பொருள்களுக்கு நஷ்ட ஈடாகவும், ரொக்க நிவாரணமாகவும் தரப்படும் என்றும் தெரிய வருகிறது.

அகதிகள் குடியமைப்புப் பிரச்சினை

அமைச்சர் கன்ன தகவல்

கல்கத்தா, ஏப். 13—

மேற்கு வங்கத்தில் அகதிகளைக் குடியமைக்க இனி இடமில்லையாம்!

பல்வேறு முகாம்களிலும் இப்போது 27,00,000 கிழக்கு வங்க அகதிகள் இருக்கிருர்களாம்!

இவர்களின் புனர் குடியமைப்புக்குப் பல்வேறு மாநிலங்களும் ஏறக்குறைய மூன்று இலட்சம் ஏக்கர் நிலம் அளிக்க முன்வந்துள்ளன என்று, அகதிகள் அமைச்சர் கன்ன அறிவித்துள்ளார். (இந்தப் பட்டியலில், சென்னை, பம்பாய், திரு-கொச்சி மாநிலங்கள் இல்லை எனத் தெரிகிறது.

மூன்றரை இலட்சம் டன் சாமான் இறக்குமதியாகும்

ஆனல் ஏற்றுமதியோ 50,000 டன் மட்டுமே

இந்தியா—ரஷ்யா கப்பல் போக்குவரத்து ஒப்பந்தம்

புதுடெல்லி, ஏப். 12—

கடந்த ஏப்ரல் 6-ந் தேதியன்று, கையெழுத்தான இந்திய—ரஷ்ய கப்பல் போக்குவரத்து ஒப்பந்தப்படி, ஆண்டொன்றுக்கு இந்தியா மூன்றரைஇலட்சம் டன் சாமான்களை ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யுமாம்; அதேபோது, இந்தியா ரஷ்யாவிற்கு 50,000 டன் சாமான்களை மட்டுமே ஏற்றுமதி செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இந்தத் தகவலை, போக்குவரத்து இலாகா உதவி மந்திரி ஓ. வி. அளகேசன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

முதன் முதலாக ஆறு இந்தியக் கப்பல்கள் பம்பாய் அல்லது கல்கத்தா துறைமுகத்திலிருந்து சாமான்களை ஏற்றிக்கொண்டு மே மாத மத்தியில் ரஷ்யாவுக்குப் புறப்படும்.

4,000 புதிய தபால் நிலையங்கள்

'1956–57ம் ஆண்டில் இந்தியா முழுமையிலுமாக 4,000 தபால் நிலையங்கள் புதிதாகத் திறக்கப்படும்,' என்று மந்திரி ராஜ்பகதூர், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

புதிய இரும்பு தொழிற்சாலை தரும் பலன்

ஒவ்வொன்றும் ஆண்டொன்றுக்கு ரூ. 20 கோடி இலாபம் தருமாம்

புதுடில்லி, ஏப். 12—

புதிதாக நிர்மாணிக்கப்படும் இரும்பு — உருக்கு உற்பத்தித் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றும், உற்பத்தி துவங்கும்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15 கோடி முதல் 20 கோடிவரை இலாபம் தரக்கூடியனவாக இருக்கும் என்ற தகவல் கிடைத்துள்ளது.

இந்தியாவில் நிர்மாண வேலைகள் துவங்கிவிட்ட மூன்று புதிய உருக்குத் தொழிற்சாலைகளும் இந்த அளவு இலாபம் தரக்கூடியனவாகவே இருக்குமாம்.

பிலாய், ரூர்கேலா துர்காபூர் தொழிற்சாலைகளில் உற்பத்தி துவங்கி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, மேலும் இரு இரும்பு உருக்கு உற்பத்தித் தொழிற்சாலைகள் துவங்குகிற அளவுக்கு இலாபம் தரக்கூடியனவாக இருக்குமாம்.

டில்லி சர்க்காரின், வர்த்தக தொழில் இலாகா, இந்த மதிப்பீட்டைத் தயாரித்திருக்கிறதாம்.

அல்ஜீரிய விடுதலை கிளர்ச்சி

ஒடுக்குவதற்கு 2 இலட்சம் பேரடங்கிய இராணுவம்

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் திரட்டுகின்றனர்

பாரிஸ், ஏப். 12—

அல்ஜீரியாவில் நடைபெறும் தேசிய விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகப் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் பெரும் யுத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவது உலகு அறிந்ததே!

இப்போது சுமார், இரண்டு இலட்சம் பேர்வரை—இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள்—திரும்பவும் இராணுவ சேவைக்கு அழைக்கப்படுவார்களாம், அல்ஜீரியக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக!

இதற்கான அதிகாரத்தை, பதவி ஏற்று இரண்டரை மாதங்கள் மட்டுமே ஆகியுள்ள மொலட் மந்திரி சபை பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

அல்ஜீரியாவிற்கு தங்கு தடையின்றி தேவையானபோதெல்லாம் விமான மூலமும், கப்பல் மூலமும் இராணுவத்தை அனுப்பிக் கொண்டிருக்கவே இந்த 2 இலட்சம் பேரடங்கிய 'ரிசர்வ்' பட்டாளம் உருவாக்கப்படுகிறதாம்.

குறிப்பு:—ஏற்கனவே இரண்டு இலட்சம் துருப்புகள் அல்ஜீரியாவில் இருந்து வருகின்றன.

பழைமை வெறிச் சம்பவ எதிரொலி

நான்கு போலீசார் வேலையிலிருந்து நீக்கம்; 15 பேர் கைது

குவாலியர், ஏப். 12—

நடுத்தரப் பெண்மணி ஒருவர், பழைமைவெறிக்குப் பலியாவதற்கு உடந்தையாகவிருந்ததாக, ஒரு தலைமையாளர் உட்பட நான்கு போலீஸ்காரர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருப்பதாக மத்திய பாரத் மாநில சர்க்கார் குறிப்பு ஒன்று கூறுகிறது.

கடந்த சனிக்கிழமையன்று மொரேனு மாவட்டத்தில் உள்ள ஷியோபூர் எனும் இடத்தில், கமலா என்ற பெண்மணி, சு. ஜ்ரத்தன் மகேஸ்வரி என்ற தன் கணவர் இறந்ததும் அவருடன் உடன்கட்டை ஏறியதாக செய்தி வந்ததல்லவா?

அந்தச் 'சதி'க்கு உடந்தையாகவிருந்ததாக, 15 பேர்வரை கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

போலீஸ்காரர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டதும் இந்த சம்பவத்தையை ஒட்டியேதான். 1951-க்குப் பிறகு, மத்திய பாரத்தில் நடைபெற்ற இரண்டாவது 'உடன்கட்டை ஏறும் சம்பவமாம் இது.

சமூக நலக் கழக முகாம்கள்

கட்டிடங்கள் அமைப்பதற்கு ரூ. 8,96,000 மானியம்!

புதுடில்லி, ஏப் 13—

10 மாநிலங்களில் உள்ள சமூக நலக் கழகக் குழுக்கள் உள்ள 259 முகாம்களில் கட்டிடங்கள் கட்டிக் கொள்வதற்காக மொத்தம் ரூ 8,96,000 மானியமாக வழங்கப்பட்டிருப்பதாக சமூக நலக் கழகம் தெரிவிக்கிறது.

சென்னை 19; ஒரிசா 44; பம்பாய் 75; திரு-கொச்சி 5; போபால் 25; மத்தியப் பிரதேசம் 25; டில்லி 11; விந்தியப் பிரதேசம் 20; பஞ்சாப் 29—என்று பிரித்து, பல்வேறு மாநிலங்களிலும் முகாம்களுக்கான கட்டிடங்கள் அமைத்துக்கொள்ள அனுமதியும், மானியமும் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு முகாமிற்கும் ரூ. 2,500 வீதம் மானியம் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

உத்தரவு அமுலாகிறது

புதுடில்லி, ஏப். 13—

கடந்த ஜூன் மாதம் பிறப்பித்த உத்தரவின்படி, இராணுவத்தினர் உணவு விடுதிகளில் நடைபெறும் விருந்துகளில், மதுவகை கலவாத பானங்களே பரிமாறப்பட்டுகின்றன என்று, மக்கள் சபையில் தற்காப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

டெல்லி முடிவுக்கு ஐதராபாத் சட்டசபை எதிர்ப்பு

பம்பாயை மராட்டியத்துடன் சேர்க்குமாறு தீர்மானம்

‘ஆந்திர பிரதேசம்’ எனப் பெயர்வைக்கக் கோரிக்கை

ஐதராபாத், ஏப். 12—
பம்பாய் நகரை மராட்டிய மாநிலத்துடன் சேர்க்கவேண்டுமென்று கோரி ஐதராபாத் சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

பம்பாய் நகர மத்திய ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமாக்குவது என்ற மாநில புது அமைப்பு மசோதாவின் 8-வது பிரிவை நீக்கிவிட வேண்டுமென எதிர்க்கட்சியினர் ஒரு திருத்தம் கொண்டுவந்தனர். இந்த திருத்தத்திற்கு ஆதரவாக 69 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் கிடைத்தன. திருத்தம் நிறைவேறியது.

அடுத்து, அதை ஒட்டி, பம்பாயை மராட்டியத்துடன் இணைக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சியினர் மற்றுமோர் திருத்தம் கொண்டு வந்தனர். இந்தத் திருத்தமும் 69 வாக்குகளை ஆதரவாகவும், 61 வாக்குகளை எதிராகவும் பெற்று நிறைவேறியது.

இந்த இரு திருத்தங்களையும் வற்புறுத்தவேண்டாம் என்றும், கைவிட்டுவிடுமாறும் முதன் மந்திரி பி. இரமகிருஷ்ணராவ் கோரினார். திருத்தங்களை காங்கிரசார் எதிர்த்தனர். மராட்டிய காங்கிரசார் நடுநிலை வகித்தனர்.

இவைமட்டுமின்றி, புதிய ஆந்திர—தெலிங்கான மாநிலத்தின் பெயரை ‘ஆந்திர பிரதேசம்’ என்று மாற்றுமாறு கோரியும், மற்றுமோர் எதிர்க் கட்சியினர் திருத்தமும் நிறைவேறியுள்ளது.

ரஷ்யாவில் மற்றுமோர் அதிகாரிக்கு சீட்டு!

பெரியாவின் கையாள் எனக் குற்றச்சாட்டு

மாஸ்கோ, ஏப். 12—
ரஷ்யாவின் பிரதம போலீஸ் அதிகாரிகளுள் ஒருவரான பைலோ ரஷ்யன் குடியரசைச் சேர்ந்த லாவ்ரண்டி எப். ஸானுவ் என்பார், பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

அதேநேரத்தில், ஸ்டாலின்காலத்திய தனிமனித ‘பூஜா முறை’யை ஒழிக்குமாறு இளைஞர்களை, ரஷ்ய சர்க்கார் கேட்டுக்கொண்டுள்ளதாம்.

எழுத்தாளர்கள் தனிமனித ‘பூஜாமுறை’ நோக்கைக் கைவிடுமாறு கோரப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது.

ஸானுவ் என்ன குற்றம்புரிந்தார் என்பது, அவர் விலக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோது விளக்கப்படவில்லை.

பைலோ ரஷ்யக் குடியரசின் நீதி இலாகா மந்திரியான ஜவான் வெட்ரோவ் என்பார் ‘ஸானுவ் சோவியத் நாட்டின் எதிரி’ என்று தாம் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறாராம்

அவர் எழுதிய கட்டுரை, ஸானுவின் பெயரை ஸ்டாலின் இறந்ததும் கொல்லப்பட்ட லாவ்ரண்டி பெரியாவின் பெயருடன் இணைக்கப்பட்டு, பெரியாவின் கையாளாக ஸானுவ் இருந்தார் என்றும் கூறுகிறதாம்.

பதிலளிக்கும்போதே அவர் இந்தத் தகவல்களைத் தந்தார்.

மானியக் கோரிக்கை நிறைவேறியுள்ளது.

டெல்லி சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

தனியார் துறையிலிருந்து உயர்தர அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்

புதுடில்லி, ஏப். 12—
மூன்ருவது பிரிவு குமாஸ்தாக்களுக்கு—இந்திய சர்க்கார் அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 55 என்பது இனி ரூ 60 ஆக உயர்த்தப்படுகிறது.

இந்திய நிர்வாக சர்வீசிற்கு உடனடியாகத் தேவைப்படுகிற 386 அதிகாரிகளில், குறைந்தது 100 பேராவது, சர்க்கார் இலாகாக்களுக்கு வெளியிலிருந்து—தனியார் நிறுவனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்.

நிர்வாக விவகாரங்களைப் பொறுத்த பல்வேறு பிரச்சினைகளை ஆராய சீக்கிரமே ஒரு குழு நியமிக்கப்படும்.

தாழ்த்தப்பட்டோர் நலன்களைக் கவனிக்கவும், பழங்குடி மக்களின் நலன்களைக் கவனிக்கவுமாக உடனடியாக இரு ‘போர்டு’கள் வேறு நிறுவப்படும்.

வெகு தூரங்களிலிருந்து வருகிற சர்க்கார் ஊழியர்களுக்கு, பிரயாணச் சலுகை தரும் பழைய முறையை காலத்திற்கு ஏற்ற மாறுதல்களுடன் திரும்பவும் அமுல் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

1951-ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் ரத்து செய்யப்படுகிறது—எழுத்தாளர்களுக்கு முழு சுதந்திரம் கிடைப்பதற்காக!

இத்தனை தகவல்களையும் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த், மக்கள் சபையில் தந்திருக்கிறார்.

உள்நாட்டு இலாகாவிற்கான ரூ. 203 கோடி மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும்போதே அவர் இந்தத் தகவல்களைத் தந்தார்.

மானியக் கோரிக்கை நிறைவேறியுள்ளது.

சிறு தொழிலில் பயிற்சி பெற!

50 பேர் வெளிநாடுகள் செல்வர்

முக்கியமான சிறு தொழில்களில் பயிற்சி பெறுவதற்காக சுமார் 50 தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

இவர்களுக்காகும் செலவு ‘போர்டு நிறுவன’த்தார் வழங்கியுள்ள 1,80,000 டாலரிலிருந்து செய்யப்படும் என்று தெரியவருகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, சுவீடன், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா நாடுகளுக்கு இந்தத் தொழிலாளர்கள் அனுப்பப்படுவராம்.

மின்சார சாதனங்கள், சத்ர சிகிச்சைக்கான உபகரணங்கள் உற்பத்தி, மற்றும் கட்டிட வேலை, இரும்புச் சாமான்கள், பாதரட்சைகள், விளையாட்டுச் சாமான்கள் முதலியன தயாரிப்பதில் உதவுவதற்காக, வெளிநாடுகளிலிருந்து சுமார் 35 நிபுணர்களை வரவழைத்துக்கொள்ளவும், டெல்லி சர்க்காரின் வர்த்தகத் தொழில் இலாகா முடிவு செய்திருக்கிறது என்று தெரியவருகிறது.

இலட்சிய அளவை அதிகரிக்கத் திட்டம்

புதுடில்லி, ஏப்ரல், 13—
நாட்டில் இப்பொழுது 27 சிமெண்ட் உற்பத்தித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. 1,20,00,000 டன்னிலிருந்து 1,60,00,000 டன்னாக சிமெண்ட் உற்பத்தி அலட்சிய அளவை அதிகரிப்பது பற்றி இப்போது மத்திய சர்க்கார் ஆலோசித்து வருகிறதாம்.

****

திராவிட வரலாற்றில் ஒரு திருப்புமுனை!

★ திராவிடம் வளம் பெறவும்
★ திராவிடர் நலம் பெறவும்
★ அதற்கான திட்டம் தீட்டி செயல்படுத்தவும்

மே 17, 18, 19, 20 தேதிகளில்

திருச்சி

பந்தயத் திடலில்

(‘ரேஸ் கோர்ஸ்’ ஜமால் முகம்மது கல்லூரி அருகில்)

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு

நடைபெறும்

★

பொதுச் செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும்
நாட்டு விடுதலை குறித்து நல்லுரை] ஆற்றுவர்

★

எழுச்சியூட்டும் நாடகங்கள்—இன்னிசை விருந்து—
ஓவியக் காட்சி ஆகிய சிறப்புகளும் உண்டு

★

திரண்டு வாரீர் தோழர்களே!

—வரவேற்புக் குழு

****

40000 ஆசிரியர்கட்கு குடிமைப் பயிற்சி

செயில் (பெப்சு), ஏப். 12—
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், சுமார் 40,000 ஆசிரியர்களைப் பயிற்றுவித்து, மாறிவரும் கால நிலைக்கு ஒப்ப குழந்தைகளுக்குக் கல்வியளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென இங்கு நடைபெறும் சமுதாய நல விவாத அரங்கு ஒன்றில் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விவாத அரங்கில், சுமார் 175 பிரதிநிதிகள், 10 மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்குக் குடிமைப் பயிற்சி, சமூக நல அபிவிருத்தி, சமூகக் கல்வி அபிவிருத்தி முதலியனவற்றில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டதாம்.

முக்கிய அறிவிப்பு

தோழர் எம். எஸ். ஏ. காதர்
அவர்களுக்கு:

“தங்கள் துணைவியாரும் குழந்தைகளும் ஓராண்டு காலமாக தங்களைப் பிரிந்து துன்பக்கடலில் நீந்தி வருகிறார்கள். இப்போது தங்கள் பொற்கொடி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறது. ஆகையினால் தங்களுக்கு இங்கு எவ்வளவுத் தொல்லைகள் இருப்பினும் நான் தீர்த்து வைக்கிறேன். தாங்கள் எங்கிருந்தாலும் உடனே புறப்பட்டு வரவும் அல்லது எனக்கு அறிவிக்கவும்”

என்று தோழர் பி. எம். மதியழகன் அறிவிக்கிறார்.

கழகச் செய்திகள்

திருநள்ளாற்றில் தி. மு க. பொதுக்கூட்டம்

8—4—56 மாலை 6 மணிக்கு திருநள்ளாறு தேரடிக்கருகாமையில், தோழர் அ. ப. கரீம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தி. மு. கழக துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் ஜம்பு, இரத்தினவேல், கோ. சத்தியமூர்த்தி, அப்துல் முகம்மது, சிசே-சவியே ஆகியோர் பேசிய பிறகு, உள்ளூர் நலனை முன்னிட்டு, தோழர் க இராமசாமி சில தீர்மானங்களைக் கொண்டுவர அவை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பல ஊர் கிளைக் கழகங்களின் சார்பில் துணைப் பொதுச்செயலாளருக்கு கைத்தறி ஆடையும், மலர் மாலையும் அணிவிக்கப்பட்டன. தோழர் இலக்குமணன் இன்னிசை வழங்கினார்.

சேலம் 18-வது வட்ட தி. மு. க. பொதுக்கூட்டம்

8—4—56 மாலை 7 மணியளவில், கழகச் சார்பில். எண் 2, வ. கு ச. தெருவில், தோழர் கே. ஆர். மாசிலாமணி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். ஏ. அன்புக்கரசு, ஜி. பி சோமசுந்திரம், சிற்றுளி-சுப்பிரமணியம், முத்துகிருஷ்ணன் ஆகியோர் பேசினார்கள்.

தாய்மார் கழக சிறப்புக் கூட்டம்

7—4—56 மாலை 3 மணிக்கு மேல், சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகத்தில், மயிலை-சிவமுத்து தலைமையில் சிறப்புப் பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. தாய்மார் கழக வரலாற்றினை தலைவர் சுருக்கிக் கூறி, இனி அவர்கள் செய்யவேண்டிய செயல்களை எடுத்து விளக்கினார்.

திரு. அண்ணல்தங்கோ பேசுகையில், தாய்மார்கள் சீக்கிரத்தில் ஒரு மாநாடு கூட்டுதல் வேண்டும் என்றும், தமிழையும், தமிழர் பழக்க வழக்கங்களையும் நெகிழவிடாமல் காப்பது தாய்மார் கடமை என்றும் குறிப்பிட்டார்.

‘அமுது’ கையெழுத்துப் பிரதி துவக்க விழா

8—4—56 மாலை 6 மணிக்கு, சென்னை—திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகம்—நூல் நிலையம், இலவச வாசகசாலையின் ‘அமுது’ கையெழுத்துப் பிரதி துவக்க விழாவை, தோழர் நீல-நாராயணன் தலைமையில் தோழர் கா. அப்பாதுரையார் துவக்கிவைத்தார். தோழர்கள் பரதன், இளம்பரிதி, எம். கே. மணி, கரிகாலன், மா. பா. சாரதி, குப்புசாமி, நெல்லை-கபிலன் ஆகியோர் பேசினர்.

உலகப்பம்பாளையம் தி. மு. கழக அமைப்புக் கூட்டம்

14—3—56 மாலை 5 மணிக்கு, தோழர் என். இராமசாமி தலைமையில், இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, செயலாளராக பி. இராமசாமி; துணைச்செயலாளராக எம். இராமசாமி; பொருள் காப்பாளராக என். குப்புசாமி; மாவட்டப் பிரதிநிதியாக என். இராமசாமியும்; நிர்வாக உறுப்பினர்களாக 15 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்..

மு. சூரக்குடி தி. மு. க. துவக்க விழா

8—4—56 மாலை 6 மணிக்கு, கச்சேரி மைதானத்தில், கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் து. முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். எஸ் இராசா கொடியேற்றினார். தோழர்கள் மு. வசனப்பித்தன், கே. எஸ். சந்தானம், மணிமாறன் ஆகியோர் பேசினர்.

ஆமதாபாத்—நரோடா 3-வது வட்ட தி. மு. க.

1—4—56 மாலை 6 மணிக்கு கழகப் பண்மனையில் தோழர் இரா. தணிகாசலம் தலைமையில், கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, தலைவரும், தோழர்கள் டி. பி. பாலகிருட்டிணன், ச. சந்திரன், இரா. வைத்திலிங்கம், கா. தேவராசனார் ஆகியவர்கள் உறுப்பினர்கள் எந்த முறையில் இயங்கவேண்டும் என்பதைக் குறித்துப் பேசினர்.

எட்டயபுரம் தி. மு. கழகம்

6—8—56 இரவு 8 மணிக்கு, கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் மே. க. முத்து தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் எஸ் கலிங்கன், தி- ராமசாமி, மு பேச்சியப்பன், மு. நடராசன் ஆகியோர் கழக வளர்ச்சி குறித்துப் பேசினர். பின்னர், விலைவாசிகள் உயர்வினால் மக்கள் படும் இன்னல் குறித்துத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

மாயூரம் நகர தி. மு. கழகம்

8—4—56 இரவு 8 மணியளவில், நியூ போட்டோ ஸ்டுடியோவில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், பொருளாளர் தோழர் வி. சங்கையன் துணைவியார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும்; பொது உறுப்பினர் கூட்டத்தை விரைவில் நடத்துவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை சர்க்கார் மீது ஈரோடு நகரசபை வழக்கு

கல்லூரிக்கு மானியம் வழங்குவதில் தகராறு

கட்சி நோக்கோடு உத்தரவு பிறப்பித்ததாகக் குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 10—

சென்னை சர்க்கார், நகரசபை ஒன்றிடம் கட்சி நோக்குடன் நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ளது.

ஈரோடு நகரசபையினர், உள்ளூரில் தனியார் நடத்துகிற மகாஜனக் கல்லூரிக்கு ரூ. 1 இலட்சம் மானியம் வழங்குவது என்று தீர்மானித்திருக்கின்றனர். அப்போது, நகரசபையில் காங்கிரஸ் கட்சியினர்தான் பெரும்பான்மையினராகவிருந்தனர்.

பின்னர், அண்மையில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரசார் பெரும்பான்மை பலத்தை இழந்து, சிறுபான்மையினராகி விட்டனர்.

புதிய நகரசபை, கல்லூரிக்கு ரூ. 1 இலட்சம் மானியம் வழங்குவது என்ற தீர்மானத்தை ரத்து செய்தது. ஏனெனில், தனிப் பட்டவர் கல்லூரிகளுக்கு, நகரசபைகள் மானியம் வழங்கக் கூடாது என்று, சர்க்கார், முன்பே ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

ஆனால், பின்னர் சர்க்கார், தங்கள் பழைய உத்தரவை மாற்றிக்கொண்டு, செழிப்பாக உள்ள நகரசபைகள் அம்மாதிரி மானியம் வழங்கலாம் எனவும், ஆகவே, பழைய நகரசபை தீர்மானித்தபடி ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கிவிடுமாறும், புதிதாக ஒரு உத்தரவிட்டதாகத் தெரியவருகிறது. நகரசபை நிர்வாக அதிகாரிக்கும், பணத்தை உடனே கல்லூரிக்குத் தந்துவிடுமாறு சர்க்கார் உத்தரவிட்டார்கள்.

இந்த உத்தரவின்படி, பணம் தரப்படாது நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென புதிய நகரசபை முயன்றும் முடியாது போய்விட்டது.

சர்க்கார் இந்த உத்தரவை, கட்சி நோக்கோடு பிறப்பித்திருக்கிறார்கள் என்றும், இந்த உத்தரவு செல்லத்தக்கது அல்லவென்றும், புதிய நகரசபைத் தலைவரும், இரு உறுப்பினர்களும் சர்க்கார்மீது, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

வழக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

148 கோடீசுவரர்கள்!

அமெரிக்கா ஐசுவரியம்மிக்க நாடு என்பார்கள். அங்கே கோடீசுவரர்கள் 148 பேர் இருந்தார்களாம், 1952-ம் ஆண்டில் — கணக்குத் தரப்பட்டிருக்கிறது.

இராமாயணத்தை.........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'இராமாயண காதை'யை நுணுகி (Research) ஆராயக் கூடாது என்று!

"பெரிய இதிகாசமாக விளங்கும் இராமாயணத்தை நுணுகி ஆராயவேண்டாம். இராமாயணம் ஒரு மாபெரிய கடல் போன்றது; அக்கடலில் மக்கள் ஆழ மூழ்கி, இதிகாசத்தை விரிவாக்கும் வகையில் புதிது புதிதாக நூற்களை எழுத வேண்டும். அதைச் செய்வதைவிடுத்து நுண்ணிய ஆராய்ச்சிக்கு இறங்கக்கூடாது."

கோவையில் 13-வது இராம நவமி விழாவைத் துவக்கிய அய்யங்கார், இவ்வாறு ஒப்பாரி வைத்திருக்கிறார்.

ஆந்திர அரசாங்கத்தின் முன்னேற்பாடு......

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பற்பலத் தொல்லைகளுக்கும் தமிழ் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் பலியாகிவருகின்றனர்.

இதற்குப் பரிகாரம் காணுவதில், 'பச்சைத் தமிழர்' ஒருவரை முதலமைச்சராகக் கொண்டு நடைபெற்றுவரும் ஆட்சிக்கு, அக்கறையும் இல்லை; வெட்கமுமில்லை!

மேட்டூர் நீர் மின்சாரத்திலிருந்துதான், ஆந்திர மாகாணத்தில் உள்ள சித்தூர் மாவட்டத்திற்கும் மின்சாரம் வழங்கப்பட்டுவருகிறது. மேட்டூர் நீர்க் குறைவின் காரணமாக, மின்சார வினியோகத்தில் 20 சதவிகிதம் வெட்டு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அவ்வெட்டு, சித்தூர் மாவட்டத்தையும் பாதிக்கிறது.

இம்மாகாணத்தில் திணிக்கப்பட்டுள்ள மின்சார வெட்டை, எந்த வகையிலாவது ஈடுசெய்தாக வேண்டுமே என்பதில் துளியும் கவலையற்றுக் கிடக்கும் கையாலாகாத காமராச ஆட்சிபோல் இல்லாது, ஆந்திர ஆட்சி, மின்சார வெட்டிலிருந்து சித்தூர் மாவட்டத்தைக் காப்பாற்ற முனைந்து வெற்றி பெற்று இருக்கிறது; மின்சார வெட்டினால் சித்தூர் பாதிக்கப்படமாட்டாது.

ஒவ்வொரு ஆண்டும் தொல்லை தரும் மின்சார வெட்டைத் தவிர்க்க முன்னெச்சரிக்கையாக, சித்தூர் மாவட்டத்திலிருக்கும் ரேணிகுண்டாவில், ஒரு எரி மின்சார உற்பத்தி நிலையத்தை, ஆந்திர அரசாங்கம் ஏற்கனவே நிர்மாணித்து விட்டது. மேட்டூர் மின்சார வெட்டான 20 சத விகித மின்சாரத்தை, அந்த எரிமின்சாரத்தைக் கொண்டு ஈடு செய்யப் பட்டு வருகிறது.

சித்தூர் மாவட்டத்தில் மட்டும், 20 சத விகித மின்சாரக் குறைப்பின் மூலம் மாதம் ஒன்றுக்கு, உபயோகத்திலிருந்து 2 இலட்சம் 'யூனிட்' குறைக்கப்படுகிறது. அக்குறைவை ரேணிகுண்டா எரி மின்சாரத்தின் மூலம் சித்தூர் மாவட்டத்தில் ஈடுசெய்து வருகிறது ஆந்திர ஆட்சி!

இத்தகவலை ஆந்திர அரசாங்க தலைமை மின்சார பொறியியல் அதிகாரி பி. ஆர். சேர்மயாஜுலு அறிவித்துள்ளார்.

சென்னைப் பொதுக் கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத்

★

சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றத்தின் முதலாண்டு விழாவையொட்டி, 16—4—56 மாலை 6 மணிக்கு, காசிவிசுவநாதர் கோயில் திடலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர் சி. எஸ். கணேசன் தலைமை தாங்குவார்.

தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் விழாவை துவக்கி வைப்பார்.

தோழர்கள் ஈ.வெ.கி. சம்பத், சி. ஆர். பாலசுந்தரம் சொற்பொழிவாற்றுவர்.

கோடை வெய்யிலுக்கு அஞ்சினர்

ஆனால் குழியில் புதையுண்டு மாண்டனர்

அகமதாபாத் அருகே பரிதாப சம்பவம்

அகமதாபாத், ஏப். 13—

சபர்மதி அருகே உள்ள காளி எனும் கிராமத்தில் சோக நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றிருக்கிறது.

11 தொழிலாளர்கள், பூமியில் குழி தோண்டி, அதற்குமேலே கூரை எழுப்பியிருந்தனர்—கோடை வெய்யிலிலிருந்து தப்பி குளிர்ச்சி பெறுவதற்காக!

நேற்றுப் பகல் அவர்கள், அந்தக் குழியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும்போது, கூரை சரிந்து விழ்ந்ததின் விளைவாக குழிக்குள் புதையுண்டனர்.

11 பேர்களில் 2 பெண்கள் உட்பட ஒன்பது பேர் இந்த விபத்தில் மாண்டனர் என்றும், 2 பேர் பரிதாபகரமான நிலையில் மருத்துவ மனையிலிருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

குற்றங்கள் குறைந்த நாடு

ஐ. நா. சபை தரும் விவரம்

புதுடில்லி, ஏப். 13—

ஐக்கிய நாடுகளின் சபையின் புள்ளி விவரங்களிலிருந்து உலக நாடுகளின் குற்றங்கள் பற்றி பின்வரும் தகவல்கள் தெரிவதாக, மக்கள் சபையில் உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் குறிப்பிட்டுள்ளார்:—

இலட்சம் பேருக்கு — அமெரிக்கா: 1,407 பேர்; பிரிட்டன்: 980 பேர்; பிரான்ஸ்: 802 பேர்; இலங்கை: 235 பேர்; இந்தியா: 154 பேர்.

பாரதிதாசன் நூல் நிலைய ஆண்டு விழா

17—4—56-ல் சென்னை—அயன்புரம் மார்க்கெட் மைதானத்தில், பாரதிதாசன் பிறந்த தின விழாவும், பாரதிதாசன் நூல் நிலைய ஆண்டுவிழாவும் தோழர் சு. குப்புசாமி தலைமையில் நடைபெறும் தோழர்கள் சி. பி. சிற்றரசு, சுரதா பேசுவர்.

சென்னை கல்விச் சங்கம்

15—4—56 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட் ஆண் பள்ளியில் 'தமிழ் இன்பம்' என்னும் பொருள்பற்றி திரு. த. வே. முருகேசனார் தலைமையில், திரு. தொ. ரா. ஜெயராமன் பேசுவார்.

திருவொற்றியூர் (தாங்கல்) இரவுப் பள்ளி நிதிக்காக

சிறப்புக் கூட்டம்

15-4-56 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு

கோகலே மண்டபத்தில்

நடைபெறும்

கே. எம். கண்ணபிரான்

தலைமை வகிப்பார்

அண்ணா

அவர்கள் சொற்பொழிவாற்றுவர்

கழக பேச்சாளர்கள் கலந்துகொள்வர்

நன்கொடை: ரூ. 1, அணா 8.

ஏ. வி. ஆறுமுகம்—அமைப்பாளர்.

கழகக் கூட்டம்

★

எலப்பாக்கம் கிராமம்:

16—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:

சி. வி. எம். அண்ணாமலை

பேசுவோர்:

அண்ணா

கே. டி. எஸ். மணி

வி. டி. அண்ணாமலை

★

ஆனைகாபுத்தூர்:

17—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:

எம். கல்யாணசுந்தரம்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

என். வி. நடராசன்

சி. இராமலிங்கம்

ஆர். புரட்சிமணி

கரூர் நகர தி. மு. கழக. செயற்குழு உறுப்பினர்கட்கு:

15—4—56 மாலை 4 மணியளவில், கரூர் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கருணாநிதி நாடக மன்றக் கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதி தேர்ந்தெடுத்தல்; மாநாட்டுத் தொண்டர்கள் சேர்த்தல்; மாநாடு விளம்பரம்; மற்றும் செயலாளரால் கொண்டுவரப்படும் இதர தீர்மானங்கள் பற்றி முடிவு செய்யப்படும்.

உங்களுக்குத் தெரியுமா?

சுமார் 4-இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 100 ரூபாய் கள்ள நோட்டுகள் சென்னை, ஆந்திர மாநிலங்களில் அச்சடிக்கப்பட்டு புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். 4000-த்திற்கு மேற்பட்ட கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாம்.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட இடங்களில் 'நம் நாடு' இதழ்களை விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய பொறுப்புமிக்க ஏஜெண்டுகள் தேவை:—

- திருச்சி
- திருநெல்வேலி
- காஞ்சீபுரம்
- யாழ்ப்பாணம்
- இராசபாளையம்
- திசையன்விளை

ஒன்பது ஆண்டுகளுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குள்ள ஆற்றல், அவ்வுதவியால் கூடுகிறது என்பது உண்மையாகும்.

"அமெரிக்க இராணுவ உதவியும், சீட்டோ, பாக்தாத் இராணுவ உடன்படிக்கைகளில் பாகிஸ்தான் சேர்ந்திருப்பதும் காஷ்மீர் வாக்கெடுப்பைத் தகர்த்துவிட்டது."

ஆர். எம். எஸ். ஊழியர் ஆண்டு விழா கூட்டம்

அ. இ. ஆர். எம். எஸ். மூன்றாம் வகுப்பு ஊழியர் சங்கம் சென்னை சார்டிங் டிவிஷன் கிளை—இரண்டாம் ஆண்டு விழா, 15—4—56 மாலை 6 மணியளவில், மதராஸ் சார்டிங் அலுவலகத்தில் நடைபெறும். தோழர் ச. சுந்தரம் விழாவைத் துவக்கிவைப்பார். தோழர் மா. இராமலிங்கம் (பின்னி) தலைமை வகிப்பார். 'போஸ்ட்மாஸ்டர்-ஜெனரல்' பி. கே. எஸ். சாரி, இரத்தினசாமி, எம். எல். ஏ., திருமதி விஜய லட்சுமி, சவுந்தரராசன், சிற்றரசு ஆகியோர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில் 14-4-'56 பிற்பகல் 2-30 மணிக்கு மேல், முத்துக்கிருஷ்ணன் தெரு, எண் 5 இல்லத்தில், திருக்குறள் வகுப்பு நடைபெறும். மயிலை—சிவமுத்து அவர்கள் 'கண்ணோட்டம்' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

வள்ளுவர் ஆண்டுவிழா—அழகிரி நினைவுக் கூட்டம்

15—4—56 மாலை 5-மணிக்கு சென்னை—பெரம்பூர், செம்பியம் பந்தர் தோட்ட 3-வது தெரு, 3/4 இல்லத்தில், வள்ளுவர் இரவு பாடசாலை மாணவர்களால் வள்ளுவர் ஆண்டுவிழாவும், அழகிரி நினைவுக் கூட்டமும் நடைபெறும்.

தலைமைக் கழகம்: அறிக்கை—6/56

உறுப்பினர் சேர்த்தல்

காலம் நீடிக்கப்படுகிறது

பல கிளைக் கழகங்களிலிருந்து உறுப்பினர் சேர்த்த தாள்கள், தலைமை நிலையத்துக்கு வந்து சேருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை முன்னிட்டும், மேலும் சில ஊர்களில் உறுப்பினர் சேர்க்கும் பணி இன்னும் முடிவுறுததாலும், உறுப்பினர் சேர்க்கும் காலம் மே 15-ந் தேதி வரையில் நீடிக்கப்படுகிறது.

எனவே 15—5—56-ம் நாளை உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகக் கொண்டு, உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்களைத் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

'அறிவகம்,' சென்னை—13
10-4-1956

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.